அனைத்து உரிமைகளும் பெற்றது

Wondershare PDFelement

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு - ஏப்ரல் 2022

## சிகையலங்கரிப்புக் கைவினைஞர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள (a), (b), (c), (d) ஆகிய விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தேர்வு செய்க.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உங்களால் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு வினாக்களுக்குமான விடைகளுக்குரிய இலக்கத்தில் (x) என்ற அடையாளத்தினை இடுக.
- இவ் வினாத்தாள் 09 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

## பகுதி 1

1. உங்களுக்குத் தேவையான சிகை வெட்டும் முறையினை உங்களால் சரியாக விபரிக்க முடியவில்லை எனின் நீங்கள் செய்ய வேண்டியது யாது?
   a) சிகையலங்கரிப்பாளரிடம் அதனை விளக்குவதற்கு நண்பர் ஒருவரை அழைத்து செல்லல்
   b) சிகையலங்கரிப்பாளரிற்கு உங்களை விட நன்கு தெரியும் என்பதால் தீர்மானத்தினை அவரிடமே விட்டுவிடுதல்
   c) உங்களால் முடிந்த வரை சிறப்பாக விபரித்தல் மற்றும் சிகையலங்கரிப்பாளரை நம்புதல்;
   d) விரும்பிய வடிவமைப்பிற்குரிய புகைப்படம் ஒன்றை கொண்டு செல்லல்

2. டெமி (Demi) நிரந்தர வர்ணங்கள் வடிவமைக்கப்பட்டிருக்காதது
   a) வாழ்த்து தெரிவித்த பின்னர், சேவையை ஆரம்பிப்பதற்கு முன்
   b) காணப்படும் வர்ணங்களை கூட்டுவதற்கு அல்லது ஐதாக்குவதற்கு
   c) தலை உச்சி மற்றும் பிடரிப் பகுதியிற்கு
   d) மீண்டும் சாயமேற்றுவதற்கு (Tint back)

3. நிறமூட்டும் செயன்முறையின் போது நிற மூலக்கூறுகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் டெமி நிரந்தர வர்ணத்தினைப் பற்றிய சரியான கூற்று,
   a) இது ஒரு முடி வர்ணத்தினை அகற்றும் தொழில்நுட்பமாகும்
   b) இது; முடி இழைகளை பெரிதாக்குகின்றது
   c) இது கனவளவு குறைந்த பெரொக்சைட்டாகும்
   d) இது அடர் பிரௌண் வர்ண முடியாகும்

Wondershare PDFelement

4. பேஸ் (base) 6 என குறிப்பிடப்படும் வர்ணம் யாது?
   a) லைற் பிரௌண் (Light brown)
   b) ப்ளொன்ட் (Blonde)
   c) அடர் ப்ளொன்ட் (Dark blonde)
   d) பிரௌண் (Brown)

5. மீள்தன்மைப் பரிசோதனை (Elasticity Test) என்றால் என்ன?
   a) முடியின் உள்ளக வலுவினை பரீட்சித்தல்
   b) பொருத்தமற்ற உற்பத்திகள் தொடர்பாக பரீட்சித்தல்
   c) முடியின் நீளத்தினைப் பரீட்சித்தல்
   d) ஒவ்வாமை தொடர்பாக பரீட்சித்தல்

6. முடியை உலர்த்தும் போது, வெப்பம் அதிகமாக காணப்படின் யாது நிகழும்?
   a) அழுத்தமான முடி கிடைக்கும்
   b) முடியை மேலும் பழுதடையச் செய்யும் அல்லது காயப்படுத்தும்
   c) முடியை வேகமாக உலரப் பண்ணும்
   d) சமனற்ற விளைவைத் தரும்

7. பச்சை வர்ணத்தினை நடுநிலைப்படுத்த நீர் பயன்படுத்தும் நிறம் யாது?
   a) கோல்ட் (Gold)
   b) கொப்பர் (Copper)
   c) சிவப்பு
   d) நீலம்;

Wondershare PDFelement

8. முன் மென்மையாக்கலினை (pre soften) எவ்வாறு மேற்கொள்வீர்?
   a) விருப்பமான ரோணினை (tone) தெரிவுசெய்து பிரயோகித்தல்
   b) சவாலான பகுதிகளிற்கு திரவ பெறொக்சைட்டினை பிரயோகித்து வெப்பத்தின் மூலம் உலர்த்துதல்
   c) சவாலான பகுதிகளிற்கு வர்ண மோஸியினை (mousse) பிரயோகித்து வெப்பத்தின் மூலம் உலர்த்துதல்
   d) முதலில் முடியினை கழுவி பின்னர் உலர்த்துதல்

9. தலைமுடி இரசாயன ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின் நீங்கள் செய்ய வேண்டியது?
   a) சேவையினைத் தொடர்ந்து மேற்கொள்ளல்
   b) தலைமுடி அதன் வலிமையை மீளப்பெறும் வரை மீளக்கட்டியமைக்கும் கெண்டிஷனிங் (conditioning) சிகிச்சையினை வழங்குதல்
   c) கெண்டிஷனிங் (conditioning) சிகிச்சையினை வழங்கி பின்னர் சேவையினை தொடர்தல்;
   d) வாடிக்கையாளரை வைத்திய ஆலோசனையின் பொருட்டு அனுப்பிவைத்தல்

Wondershare
PDFelement

10. தலைமுடியின் எந்தப் பகுதியானது இரசாயன அலைக் கரைசலை மிக வேகமாக அகத்துறிஞ்சுகின்றது?
    a) தலை உச்சிப் பகுதி
    b) தலையின் மேற்பகுதி (scalp)
    c) தலைமுடியின் நுண்துளைத்தன்மை அதிகமாகக் காணப்படும் பகுதி
    d) தலைமுடியின் அடர்த்தி மிக அதிகமாகக் காணப்படும் பகுதி

11. பின்வருவனவற்றுள் தலைமுடியின் கட்டமைப்பினை தீர்மானிப்பது எது?
    a) நுண்துளைத்தன்மை (Porosity)
    b) மீள்தன்மை (Elasticity)
    c) விட்டம் (Diameter)
    d) அடர்த்தி (Density)

12. வாடிக்கையாளரின் முடியினை அழுத்தமானதாக மாற்றப் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
    a) சவரக்கத்தி (Razor)
    b) கத்தரிக்கோல் (Shears)
    c) க்ளிப்பர்ஸ் (Clippers)
    d) ஐதாக்கும் கத்தரிக்கோல் (Thinning shears)

13. இரசாயன தளர்த்தி மீள் தொடுகை சேவையின் (chemical relaxer retouch service) போது கெண்டிஷனர் - பில்லர் பயன்படுத்தப்படுவது ஏன் அவசியமாகும்?
    a) தளர்த்தியினை முடியில் பூசுவதற்கும் நிலைநிறுத்துவதற்கும்
    b) முடித் தண்டினுள் தளர்த்தி ஆழமாக ஊடுருவ அனுமதிப்பதற்கு
    c) நுண்துளைத் தன்மையினை சீரான பரம்பலிற்கு
    d) நடுநிலையாக்கல் நேரத்தினை அதிகரிப்பதற்கு

Wondershare PDFelement

14. அல்க்கலைன் இரசாயன அலையாக்கலுக்கான (alkaline chemical waving) பரிகரிப்பு நேரத்தின் போது தலைமுடியானது:
    a) விரிவடையும்
    b) வன்மையாகும்
    c) சுருங்கும்
    d) வட்டமாகும்

15. இரசாயன அலையாக்கத்தின் போது மிகக்குறைந்த செயன்முறை நேரம் தேவைப்படும் தலைமுடியின் வகை ஆவது:
    a) நுண்ணிய
    b) கரடுமுரடான
    c) எதிர்ப்புத் தன்மையுள்ள
    d) ஐதான

16. உயர் அல்கலைன் ஷாம்பூ வகைகளை அடிக்கடி பிரயோகிப்பனால் தலைமுடிக்கு ஏற்படக்கூடியது:
    a) உலர்தல்
    b) எண்ணைத்தன்மை
    c) சுருளல்
    d) அடர்த்தி

Wondershare PDFelement

17. சாயமிடலின் போது வெளிறிய தலைமுடி பழைய நிறத்தை பெற்றுக்கோள்ளும். இதன் போது அவசியமானது,
    a) பில்லரினை பிரயோகித்தல் வேண்டும்
    b) தலைமுடியினை மென்மையாக்க வேண்டும்
    c) நிறமுள்ள சவர்க்காரத்தினை பயன்படுத்த வேண்டும்
    d) முடியினது தண்டினை அகற்றுதல் வேண்டும்

18. தளர்த்தி சிகிச்சையின் (relaxer treatment) போது உணர்திறன் மிக்க தலை மேற்பக்கத்தினைப் பாதுகாப்பதற்கு பின்வருவனவற்றுள் எதனை மேற்கொள்ளல் வேண்டும்?
    a) ஒரு பாதுகாப்பு அடிப்படையினை பிரயோகிக்க வேண்டும்
    b) மென்மையான ஷாம்பூவினை பிரயோகிக்க வேண்டும்
    c) தலைமுடிக்கு கெண்டிஷனரினைப் பிரயோகிக்க வேண்டும்;
    d) தலையின் மேற்பகுதிக்குக் கட்டுப்படுத்தும் பதார்த்தத்தினை பயன்படுத்த வேண்டும்

19. முடி வெட்டுதலின் போது அதிக ஏற்றத்தினைப் (elevation) பயன்படுத்துவது:
    a) தொகையினை சேர்ப்பதற்கு
    b) ஐதான முடியிற்கு
    c) படைகளை உருவாக்குவதற்கு
    d) அறிவுறுத்தல்களை உருவாக்குவதற்கு

20. சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றில் பல்வேறு மட்ட கிருமித்தொற்றுக் கட்டுப்பாடுகள் அவசியமாகும். இதில் ஆகக்குறைந்த மட்ட தொற்றுக் கட்டுப்பாடாவது
    a) தொற்றுநீக்கம் செய்தல் (Sterilization)
    b) துப்பரவு செய்தல் (Sanitation)
    c) கிருமி நீக்கம் செய்தல் (Disinfection)
    d) பக்ரீரியா கொல்லி (Bactericide)

21. தலைமுடி அழுத்தியில் இருத்து எதிர்பாராத விதமாக எரிகாயம் ஏற்படின் செய்ய வேண்டியது?
    a) எரிகாயத்தினை குளிர் நீரினுள் அமிழ்த்த வேண்டும்;
    b) எரிகாயத்திற்கு களிம்பு மருந்து பூசுதல்;
    c) காயத்திற்கு பான்டேஜ் இடுதல்;
    d) காயத்தினை சூடான நீரினுள் அமிழ்த்துதல்

22. இலகுவாக நுரைக்கக்கூடிய தன்மையினை கொண்டிருப்பதால் சலூன்களில் ஷாம்பூ இடலிற்கு இந்த வகையான நீர் பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு
    a) சூடான நீர் ஆகும்
    b) மென்மையான நீர் ஆகும்
    c) வன்மையான நீர் ஆகும்
    d) வெதுவெதுப்பான நீர் ஆகும்

Wondershare PDFelement

23. உயர் pH மட்டத்தினை கொண்ட ஷாம்பு ஆனது தலைமுடியினை,
    a) உலர்த்தி உடையக்கூடியதாக மாற்றும்
    b) மென்மையாக மாற்றும்
    c) பளபளப்பாக்கும்
    d) கருமை நிறமாக்கும்

24. ஊசிச் சுருளின் பிரதானமான மூன்று வகைகளும் எவை?
    a) Curl, Balance, Stem
    b) Circle, Stem, Curl
    c) Base, Stem, Circle
    d) Contour, Base, Curl

25. தலைமுடியை வெட்டும் போது கத்தரிக்கோலின் நிலையான பிளேட்டினை கட்டுப்படுத்தும் விரல் யாது?
    a) மோதிர விரல்
    b) சுண்டு விரல்
    c) சுட்டு விரல்
    d) பெருவிரல்

26. தலைமுடியினை வெட்டும் போது பயன்படுத்தக்கூடிய வழிகாட்டிகள் இரண்டு காணப்படுகின்றன. அவையாவன?
    a) நிலையான மற்றும் இயங்குகின்ற
    b) சமாந்தரமான மற்றும் நிலையான
    c) முழுமையான மற்றும் முழுமையற்ற
    d) நீட்டல் மற்றும் பகுதியாக்கல்

Wondershare PDFelement

27. மேரி தனது வாடிக்கையாளர் ஒருவருடன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். அவருடைய வாடிக்கையாளர் தனக்கு “ஷக்” "shag" ஹெயார் கட் வேண்டும் என கூறுகிறார். மேரி தலைமுடியினை வெட்டும் போது எந்த கோணத்தில் அதனை உயர்த்தி பிடிக்க வேண்டும்?
    a) 0° பாகையில்
    b) 45° பாகையில்;
    c) 90° பாகையில்
    d) 180° பாகையில்

28. அனிலீனின் விளை பொருட்களை கொண்ட வர்ணங்களை வாடிக்கையாளரிற்கு பிரயோகிப்பதற்கு முன்னர் வாடிக்கையாளருக்கு இரசாயனங்கள் தொடர்பான உறுத்துணர்ச்சி உள்ளதா என பரிசோதிப்பதற்கு ______ அவசியமாகும்
    a) பேட்ச் சோதனை (Patch test)
    b) இழை சோதனை (Strand test)
    c) முடி நுண்துளை சோதனை (Hair porosity test)
    d) தலைமுடிக்கான மீள்தன்மை அளவீடு (Hair elasticity measurement)

29. நிரந்தர வர்ணங்கள்
   a) நிறத்தை பதிக்கும் மற்றும் ஒரு ஷாம்பூவுடன் கழுவப்பட்டு விடும்
   b) செயற்கையான நிறப்பொருளை உயர்த்தும் மற்றும் ஒரு ஷாம்பூவுடன் கழுவப்பட்டுவிடும்.
   c) இயற்கையான நிறப்பொருளை உயர்த்தும் மற்றும் ஒரு தனி செயன்முறையின் போது செயற்கையான நிறப்பொருட்களை பதிக்கும்.
   d) செயற்கையான நிறப்பொருளை உயர்த்தும் மற்றும் ஒரு படிமுறையில் இயற்கையான நிறப்பொருட்களை பதிக்கும்.

30. வொலியூம் (கனவளவு) என குறிப்பிடப்படும் ஒரு டிவலொப்பரில் காணப்படும் பெரொக்ஸைட்டின் சதவீதம் யாது?
   a) 3%
   b) 6%
   c) 9%
   d) 12%

31. தலைமுடியில் உள்ள வர்ணத்தினை அகற்றி மீண்டும் விருப்பமான மட்டத்தில் வர்ணம் பூசும் செயன்முறை அழைக்கப்படுவது?
   a) ஒரு இரட்டை செயன்முறை தொழில்நுட்பம் (A double process technique)
   b) மும்மைச் செயன்முறை தொழில்நுட்பம் (A triple process technique)
   c) மீளவும் சாயம் பூசுதல் Tint back
   d) இரட்டை வெளிற்றும் தொழில்நுட்பம் (Double bleach technique)

32. எவ்வளவு நேரம் ஓர் நிறமானது பரிகரிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கும் போது நீங்கள் எப்போதும் கருத்திற் கொள்ள வேண்டிய விடயமாவது
   a) சலூன் மேற்பார்வையாளரை
   b) சலூனின் கொள்கைகளை
   c) உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களை
   d) வாடிக்கையாளரின் ஆலோசனையினை

33. நிரந்தர அலையாக்கத்திற்கான சேவையின் போது தலைமுடியிற்கு உறையிடும் (wrapping) முறையான மேற்பொருந்தல் முறை (overlap method) எவ்வாறு அழைக்கப்படுகின்றது:
   a) குரொக்கிக்னோல் தொழில்நுட்பம் (Croquignole technique)
   b) ஸ்பைறல் தொழில்நுட்பம் (Spiral technique)
   c) புக்கென்ட் தொழில்நுட்பம் (Bookend technique)
   d) இரட்டை புக்கென்ட் தொழில்நுட்பம் (Double bookend technique)

34. நீங்கள் வாடிக்கையாளரின் தளர்த்தியினை கழுவி அகற்றி விட்டீர்கள். தற்போது இரசாயன தளர்த்தியின் (chemical relaxer) pH மட்டத்தினை குறைக்க வேண்டியுள்ளது. இதற்கு எந்த வகையான ஷாம்பூவினை தெரிவுசெய்வீர்கள்?
   a) வொலியூமைசிங் ஷாம்பூ (Volumizing shampoo)
   b) கெண்டிஷனிங் ஷாம்பூ (Conditioning shampoo)
   c) நடுநிலையாக்கும் ஷாம்பூ (Neutralizing shampoo)
   d) ரெக்ஸறைசிங் ஷாம்பூ (Texturizing shampoo)

35. முடி வெட்டும் போது அதற்கு நிறையினைச் சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஏற்றக் கோணம் (elevation angle) யாது?
   a) 100°
   b) 45°
   c) ஏற்றக் கோணம் பயன்படுத்தப்பட வேண்டியதில்லை
   d) 90°

36. ஒரு நிமிடத்திற்கும் அதிகமான நேரத்திற்குக் காணப்பட வேண்டிய கெண்டிஷனர் சிகிச்சையினை மேற்கொண்ட ஒரு வாடிக்கையாளரிற்கு செய்ய வேண்டியது?
   a) வாடிக்கையாளரின் தலைக்கு தொப்பியினை அணிவித்து அவரை நேராக அமர வைத்தல்
   b) அலங்கரிக்கும் கதிரையில் இருந்து வாடிக்கையாளரை வெளியேற்றி காக்க வைத்தல்
   c) வாடிக்கையாளரை நேரம் வரும் வரை கழுவும் தொட்டியில் (sink) இருக்க வைத்தல்
   d) தலையில் ஒரு துவாயை சுற்றி வாடிக்கையாளரை நேராக அமரவைத்தல்

37. கெண்டிஷனர்களில் சிலிக்கன் (silicone) ஆற்றும் பங்களிப்பு யாது?
   a) முடியின் ஒழுங்கற்ற தன்மையினைக் (frizz) குறைத்தல்
   b) ஈரலிப்பை தக்க வைத்தல்;
   c) பளபளப்பினை வழங்குதல்;
   d) தொகையை அதிகரித்தல்

Wondershare PDFelement

38. ஷாம்பூ றப்பிங் (chemical draping) எவ்வாறு கெமிக்கல் றப்பிங் (chemical draping) இல் இருந்து வேறுபடுகின்றது?
   a) துவாய்கள் வாடிக்கையாளரின் தோள்களிற்கு குறுக்காக காணப்படும்
   b) இரண்டும் சமமானவை
   c) கெமிக்கல் றப்பிங்கிற்கு அதிக எண்ணிக்கையான துவாய்கள் தேவை
   d) துவாய்கள் வாடிக்கையாளரின் நாடிக்கு கீழ் குறுக்காகக் காணப்படும்

39. தலைமுடியின் நுனி வெடிப்புகள் எவ்வாறு சீர்செய்யப்படுகின்றது
   a) புரோட்டீன் சிகிச்சை மூலம்
   b) வெட்டுதல் மூலம்
   c) கெண்டிஷனர் சிகிச்சை மூலம்
   d) தலைமுடியிற்கு உறையிடுதல் மூலம்

40. கெண்டிஷனர்களில் ஹியூமெக்ரன்ற் (ஈரப்பதமூட்டிகளின் - humectants) இன் தொழிற்பாடு யாது?
   a) முடிகளின் தொகையை அதிகரித்தல்
   b) புரதத்தினை மீள நிரப்பல்
   c) ஈரப்பதனை தக்கவைப்பதை ஊக்குவித்தல்;;
   d) உதிர்வினைக் (frizz) குறைத்தல்

Wondershare
PDFelement

41. சமச்சீரற்ற சமநிலைகளின் இரண்டு வகைகளும் எவை?
   a) மூலைவிட்டமான மற்றும் நிலைக்குத்தான
   b) முன் மற்றும் பின்
   c) நிலைக்குத்தான மற்றும் கிடையான
   d) கிடையான மற்றும் மூலைவிட்டமான

42. வட்டமான முக அமைப்பிற்கு மிகப்பொருத்தமான சிகை அலங்காரம் எது?
   a) உச்சியில் உயரமாகவும் கனமாகவும் காணப்படுவதுடன் பக்கங்களில் சிறிதளவு அல்லது கனமற்றதாக காணப்படுதல்
   b) பக்கங்களில் கனமாகவும் உச்சியில் குட்டையான வெட்டாகவும் காணப்படல்;
   c) தாடை மற்றும் நெற்றிக்கு அருகில் கனமாக காணப்படல்
   d) கன்னத்திற்கு அருகில் கனமாகவும் உச்சியில் உயரமாகவும்

43. பெரிய பகுதியாக முடியை வெட்டுவதற்கு மிகப் பொருத்தமான நறுக்கி (shear) யாது?
   a) ரெக்ஷறைசிங் நறுக்கி (Texturizing shear)
   b) பிளென்டிங் நறுக்கி (Blending shear)
   c) தின்னிங் நறுக்கி; (Thinning shear)
   d) சங்கிங் நறுக்கி (Chunking shear)

44. பின்வருவனவற்றுள் ஒரு கெண்டிஷனர் வகை அல்லாதது எது?
   a) விடுவிக்கும் கெண்டிஷனர் (Leave-in conditioner)
   b) பழுதுபார்க்கும் கெண்டிஷனர் (Repair conditioner)
   c) கழுவி அகற்றும் கெண்டிஷனர் (Rinse-out conditioner)
   d) உலர் கெண்டிஷனர் (Dry conditioner)

45. எந்த இரண்டு குறிப்பிட்ட புள்ளிகளில் சீப்பு தலையில் இருந்து வெளியேறுகின்றது?
   a) நான்கு மூலைகள் மற்றும் உச்சி (Four corners and apex)
   b) ஒசிபிற்றல் என்பு மற்றும் பறைற்றல் றிட்ஜ் (Occipital bone and parietal ridge)
   c) உச்சி மற்றும் ஒசிப்பிற்றல் என்பு (Apex and occipital bone)
   d) ஒபறைற்றல் றிட்ஜ் மற்றும் உச்சி (Parietal ridge and apex)

46. பின்வருவனவற்றுள் தலைமுடியின் இயற்கையான அலை வடிவங்களுள் ஒன்று அல்லாதது எது?
   a) அலை அலையான (Wavy )
   b) நுண்ணிய (Fine)
   c) மிகவும் சுருண்ட (Extremely curly)
   d) நேரான (Straight)

47. ஈரலிப்பாக்கும் கெண்டிஷனர் ஆனது வளியில் உள்ள ஈரலிப்பினை அகத்துறிஞ்சுவதற்கு ____________ உதவுகின்றது
   a) புறத்தோல் (Cuticle) இற்கு
   b) மேற்பட்டை (Cortex) இற்கு
   c) மையவிழையம் (Medulla) இற்கு
   d) மேற்கூறிய யாவும்

Wondershare PDFelement

48. பில்ட் - அப் இனை அகற்றுவதற்கு எந்த வகையான ஷாம்பூவினை பயன்படுத்த வேண்டும்?
   a) மருத்துவ ஷாம்பு (Medicated shampoo)
   b) சமப்படுத்தும் ஷாம்பு (Balancing shampoo)
   c) கொண்டிஷனிங் ஷாம்பு (Conditioning shampoo)
   d) தெளிவாக்கும் ஷாம்பு )Clarifying shampoo)

49. ஆரோக்கியமானதலையின் மேற்பகுதிக்கு (Scalp) அவசியமான அடிப்படை தேவைப்பாடுகளை கொண்ட சோடி பின்வருவனவற்றுள் எது?
   a) தூய்மை மற்றும் ஒழுங்காக சலூனிற்கு செல்லுதல்
   b) தூய்மை மற்றும் தூண்டல்
   c) தூண்டல் மற்றும் ஒழுங்காக சவரம் செய்தல்
   d) ஒழுங்காக சவரம் செய்தல் மற்றும் தூய்மை

50. பின்வருவனவற்றுள் பிரஷ்ஷிங்கின் ஒரு தொழிற்பாடு அல்லாதது எது?
   a) பில்ட் - அப் இனை அகற்றுதல்
   b) குருதி சுற்றோட்டத்தினை தூண்டுதல்
   c) சிக்கெடுத்தல்
   d) தலை மேற்பகுதிப் பரிசோதனை

Wondershare PDFelement

(01 x 50 = 50 புள்ளிகள்)

Wondershare PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றது

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு - ஏப்ரல் 2022

## சிகையலங்கரிப்புக் கைவினைஞர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>

- இவ் வினாத்தாளில் முதலாவது (01) வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்கவும். (முதலாவது (01) வினாவுக்கு விடையளித்தல் கட்டாயமானதாகும் என்பதுடன் விடைனளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்'ணிக்கை ஐந்து (04) ஆகும்)
- வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள இடங்களில் விடையளிக்கவும்.
- இவ் வினாதாள் 07 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

### <u>பகுதி 2</u>

1.

i). குறுக்கு தொற்று என்பதனை விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

ii). உலகலாவிய ரீதியில் தொற்றுநோய் பரவும் இக் காலப்பகுதியில் குறுக்குத் தொற்றினை எவ்வாறு தடுக்கலாம்? (2.5 புள்ளிகள்)

iii). தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iv). சலூன் ஒன்றில் வாடிக்கையாளரின் தேவையினை இனங்காண்பதன் முக்கியத்துவம் யாது? (2.5 புள்ளிகள்)

2.

i). இரசாயனங்களை கலக்கும் போது ஏற்படக்கூடிய விபத்துக்களை எவ்வாறு தடுக்கலாம்? (2.5 புள்ளிகள்)

ii). ஸ்ரெயிற்னிங் கிறீம் இனை மேலதிகமாக பிரயோகிப்பதனால் தலைமுடிக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் எவை? (2.5 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). மேலே குறிப்படப்பட்ட பாதிப்பிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சையை எழுதுக?

(2.5 புள்ளிகள்)

Wondershare
PDFelement

3.

i). தலைமுடியின் வளர்ச்சி வட்டத்தினை விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

ii). 'பொப்' வெட்டின் சரியான படிமுறைகளை எழுதுக? (2.5 புள்ளிகள்)

iii). தலைமுடியினை ஸ்ரெயிற்னிங் செய்யும் போது சரியான அறிவுறுத்தல்களை பின்பற்றாமையினால் சிகையலங்கரிப்பாளர் மற்றும் வாடிக்கையாளர் ஆகியோருக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை விபரிக்குக?

(05 புள்ளிகள்)

Wondershare
PDFelement

Wondershare
PDFelement

4.

i). மீள்தன்மைக்கான பரிசோதனையை எவ்வாறு மேற்கொள்வீர்? சுருக்கமாக விபரிக்குக? (02 புள்ளிகள்)

ii). ‘பேர்ம்’ இனை மேற்கொள்வதற்கு முன்னர் மீள்தன்மை பரிசோதனையினை ஏன் மேற்கொள்ள வேண்டும்? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). தலைமுடி வகைகளிற்கு இணங்க இரசாயன தயாரிப்புகளை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும்?

(05 புள்ளிகள்)

Wondershare PDFelement

5.

i). நிரந்தரமான பேர்மிங் சிகிச்சையின் போது பேர்மிங் லோஷன் பயன்படுத்தப்படும் செய்முறையை எழுதுக? (2.5 புள்ளிகள்)

ii). தலைமுடிக்கான இரசாயன சேவை ஒன்றினை வழங்குவதற்கு வாடிக்கையாளரை தயாராக வைத்திருக்கும் சரியான செயன்முறை யாது? (2.5 புள்ளிகள்)

iii). தலைமுடிக்கான வர்ணங்கள் மற்றும் ஏனைய இரசாயனங்களை பாவிக்கும் போது ஒரு சலூனினுள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை? (05 புள்ளிகள்)

Wondershare PDFelement

Wondershare PDFelement

6.

i). வாடிக்கையாளர் அறிக்கையில் உள்ள அவர் முன்னர் பெற்றுக் கொண்ட சிகிச்சை அல்லது பராமரிப்பு தொடர்பாக இனங்காணவேண்டியதன் முக்கியத்துவம் யாது? (03 புள்ளிகள்)

ii). இயற்கையான தலைமுடி வர்ணத்தின் ஆழம் மற்றும் அடர்த்தி ஆகியவை தொடர்பாக விளக்கும் சரியான வழிமுறையை எழுதுக? (03 புள்ளிகள்)

Wondershare PDFelement

iii). சிகை அலங்கரிப்பு நிறுவகம் ஒன்றில் உள்ள கருவிகள் மற்றும் உபகரணங்களை தொற்றுநீக்கும் முறைகளை சரியான ஒழுங்கில் தருக? (04 புள்ளிகள்)

Wondershare PDFelement

7.

i). விரல் அலை தலைமுடி ஒழுங்கமைத்தல் செயன்முறையை விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

ii). தலைமுடியின் இழைய அமைப்பு என்பதனை விபரிக்குக. (2.5 புள்ளிகள்)

iii). ஒரு நீண்ட சிகை அலங்கரிப்பிற்கு தலைமுடியினை எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதனை விபரிக்குக? (05 புள்ளிகள்)

Wondershare PDFelement